GWOP No. 115/2022

**15.10.2025**

**ம.த.சா. 1- திரு. சம்பத், த/பெ. ஜனார்தனன்**

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.

**எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

**நேரம் 13.00 மணி**

என் மனைவியின் பெயர் புவனேஷ்வரி. இந்த வழக்கில் நான் மனுதாரர் என்றால் சரிதான். நான் மனுவில் குறிப்பிட்டுள்ள முகவரியில் குடியிருந்து வருகிறேன். எங்களது திருமணம் 31/10/2008ல் நடைபெற்றது என்று மனுவில் குறிப்பிட்டுள்ளேன். திருமணத்திற்கு முன்பு நிச்சயம் எப்போது நடைபெற்றது என்றால் 2008ஆம் வருடம் தேதி ஞாபகமில்லை ஊா என்ற கோயம்பேட்டில் உள்ள ஓட்டலில் நடைபெற்றது. திருமணத்திற்கு 2 மாதத்திற்கு முன்பதாக நிச்சயதார்த்தம் நடைபெற்றது என்றால் சரிதான். நிச்சயதார்த்தம் நடைபெறும்போது திருமண தேதி நிச்சய தாம்பூலத்தில் குறிப்பிடப்படும் என்றால் சரிதான். நிச்சயதார்த்த ஒப்பந்தப்பத்தில் என் அம்மாவின் அண்ணன் ஜெயக்குமார் மற்றும் பெரியவர்கள் கையொப்பமிட்டனர். என் உடன்பிறந்தவர்கள் என் அண்ணன் நாகராஜ், என் தங்கை லட்சுமி, என் தம்பி ராஜா. எங்கள் திருமணத்திற்கு பிறகு தான் என் அண்ணனின் திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். என்னுடைய தம்பிக்கு திருமணம் முடிந்துவிட்டதா என்றால் இன்னும் திருமணமாகவில்லை. எங்கள் திருமணம் நடைபெற்ற பிறகு Honeymoon க்கு ஊட்டிக்கு சென்றோம். அங்கு எத்தனை நாள் தங்கியிருந்தோம் என்றால் 1 நாள் தங்கியிருந்தோம். என் மனைவி பேருந்தில் செல்லும்போது வாந்திஎடுத்ததால் மருத்துவமனைக்கு சென்று பரிசோதனை செய்து பார்த்தபோது என் மனைவி கருவுற்றிருந்தார். ஆகவே ஒரே நாளில் திரும்பிவிட்டோம். என்னுடைய மனுவில் திருமணத்திற்கு முன்பு எனது அம்மாவிற்கு கேன்சர் இருந்ததாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். என் மனுவில் என் மனைவிக்கு அறிவு சார்ந்த விஷயங்களை ஏற்றுக்கொள்வதற்கான மன பக்குவமில்லை என்று கூறியுள்ளேன் என்றால் அவருக்கு மூளை வளர்ச்சி குறைவாக உள்ளது. அது சம்பந்தமாக மருத்துவ சிகிச்சையோ, என் மனைவி மருத்துவனைக்கு அழைத்து சென்று மருத்துவரிடம் ஆலோசித்தேனா என்றால் என் வீட்டின்

அருகிலுள்ள மருத்துவரிடம் ஆலோசித்தேன். அவர் என் மனைவிக்கு பிறப்பிலிருந்து மூளை வளர்ச்சி குறைவு என்று கூறினார். அதுசம்பந்தமாக ஆவணங்கள் ஏதாவது நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. இந்த நீதிமன்றத்தில் என்னுடைய மனைவி சம்பந்தப்பட்ட மருத்துவ ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை ஆகவே என் மனைவி மீது பொய்யான சங்கதிகளை கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. 2008 திருமணத்திற்கு முன்பதாகவே நிச்சயதார்த்தம் நடந்த பிறகு என் மனைவி வீட்டாரோடு தொடர்பில் இருந்தேன் என்றால் சரிதான். நான் மட்டுமல்லாம் என் குடும்பத்தினரும் என் மனைவி வீட்டாரோடு தொடர்பில் இருந்தார் என்றால் சரியல்ல. நிச்சயதார்த்திற்கு என் குடும்பத்தினர் வந்தார்கள் பின்னர் திருமணத்திற்கு தான் வந்தார்கள். இந்த நீதிமன்றத்தில் நான் தவறாக சொல்கிறேன் என்றாலும் என் குடும்பத்தினரும் என் மனைவி வீட்டாரோடு தொடர்பில் இருந்தார்கள் என் தந்தையுடனும், என் குடும்பத்தினருடம் நெருக்கமான தொடர்பில் இருந்தார்கள் என்றால் சரியல்ல. என் அம்மா கேன்சர் சிகிச்சைக்காக மருத்துவமனயில் அனுமதிக்கப் பட்டிருந்தார்கள். அப்போது என் அம்மாவை பார்க்க வந்தார்கள். நான் என் மனுவில் நிச்சயதார்த்தம் ஒப்பந்தம் முடிந்து திருமணம் அவசர அவசரமாக நடந்து என்று கூறியுள்ளேன் என்றால் என் அம்மா இறந்துவிடுவார் என்று மருத்துவர் சொன்னதால் ஆகவே திருமணம் அவசரமாக என் அம்மா இறப்பதற்குள் திருமணத்தை நடத்தி வைத்தார்கள். நான் கூறியதுபோல் அவசர அவசரமாக திருமணம் நடைபெறவில்லை என்றாலும் நிச்சயதார்த்தில் முடிவுசெய்யப்பட்ட திருமணம் தேதியில் திருமணம் நடைபெற்றது என்றால் எனக்கு ஞாபகமில்லை. இந்த வழக்கிற்காக நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய மகன் எந்த தேதியில் பிறந்தார் என்றால் ஸ்ரீதேவி மருத்துவமனையில் 24/09/2009 தேதி பிறந்தார். என் மனைவிக்கு சுகப்பிரசவமா என்றால் அறுவை சிகிச்சை மூலம் குழந்தை பிறந்தது. எனக்கு முதல் குழந்தை பிறந்த பிறகு என் மனைவி கருவுற்றிருந்தார் என்றால் ஒருநாள் இரவு வயிற்று வலி வந்தது மருத்துவமனையில் அனுமதித்தேன். என் மனைவி வீட்டில் யாரும் வரவில்லை. என் மனைவிக்கு Medical Terminated Pregnancy செய்தார்கள். நான் அவ்வாறு Medical Terminated Pregnancy செய்யதபோது நான் எந்த உதவியும் என் மனைவிக்கு

செய்யவில்லை என்றாலும் சரியல்ல. ஸ்ரீ தேவி மருத்துமவனையில் என் மனைவியின் சகோதரியின் கணவர் மருத்துவமனையில் பணிபுரிந்தார் என்றால் சரிதான். நான் என் மனைவியை அனுமதித்தபோது அவர் மருத்துவமனையில் இல்லை. அவர் அந்த மருத்துவமனையில் என் மனைவியின் குடும்பத்தினர் தான் என் மனைவியை கவனித்துக் கொண்டார்கள் என்றால் சரியல்ல. என் மனைவிக்கு எத்தனை முறை MTP நடைபெற்றது என்றால் 2 முறை செய்தோம். நான் சொல்வது சரியல்ல என்றாலும் 3 முறை MTP நடைபெற்றது என்றால் சரியல்ல. முதல் மகன் பிறந்ததுடன் சேர்த்து என் மனைவி 4 முறை கர்ப்பம் தரித்தார்கள் என்றால் சரியல்ல. 2 முறை MTP நடைபெற்றது என்று எந்தெந்த தேதியில் நடைபெற்றது என்று எனக்கு தெரியுமா என்றால் முதல் முறை MTP செய்யதது ஞாபகமில்லை, 2ஆவது முறை டிசம்பர் 2012ல் என் மனைவியை அவர் வீட்டில் கொண்டு விட்டபிறகு MTP நடந்தது. அதை என் மனைவி வீட்டார்கள் பார்த்துக்கொண்டார்கள். நான் எந்த தேதியில் அவர் வீட்டில் கொண்டுபோய் விட்டேன் என்றால் 24/12/2012ல் விட்டேன். அப்போது என் மனைவி கர்ப்பமாக இருந்தார் என்றால் சரிதான். அதற்கு பின் என் மனைவி பார்க்க முயற்சி செய்தபோது என் அழைப்பை துண்டித்துவிட்டார்கள். பெரியவர்கள் மூலமாக பேச்சு வார்த்தை நடத்தி என் மனைவியை பார்ப்பதற்கு முயற்சி செய்தேனா என்றால் என் சின்னம்மா, என் சித்தப்பா ஆகியோரை என் மனைவியின் வீட்டிற்கு சென்று என் மனைவியை அழைத்து வாருங்கள் என்று கூறினேன். என் மனைவி வர மறுத்துவிட்டார். அவ்வாறு நான் எந்த முயற்சியும் எடுக்கவில்லை என்றாலுல் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.